**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்.**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**(திருவள்ளுவராண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள்)**

**அசல் வழக்கு எண்.144/2024**

**[TNDG07 – 000569 – 2024]**

**செ. கருப்புச்சாமி ––– வாதிகள்**

**/எதிர்/**

**1. துரைச்சாமி**

**2. ராஜ்மோகன்**

**3. சஞ்சித்ராகுல் ––– பிரதிவாதிகள்**

இந்த வழக்கானது 24.01.2017 அன்று பழனி சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.17/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னிட்டு மாண்புமிகு திண்டுக்கல் முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் A.No.137/2021/A1, Dated : 15.12.2021 ஆம் தேதியிட்ட உத்தரவின்படி ஒட்டன்சத்திரம் சார்பு நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, அந்த நீதிமன்றத்தால் அ.வ.எண்.92/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அதன்பின்னிட்டு 25.07.2024 ஆம் தேதி இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் அ.வ.எண்.144/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 12.03.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P. மகேந்திரன் மற்றும் B. மனோகரன் ஆகியோர் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் D. ஜீவானந்தம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## தீர்ப்புரை

27.01.2025 ஆம் தேதிய கிரைய ஒப்பந்தப்படி வாதி, பிரதிவாதிகளுக்கு செலுத்தியுள்ள கிரைய முன்தொகை ரூ.5,00,000/– போக பாக்கி கிரையத் தொகை ரூ.2,00,000/–யும், இந்நீதிமன்றத்தில் டெபாசிட் செய்ய அதை பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு பிராது சொத்துக்களைப் பொறுத்து பிரதிவாதிகள் வாதியின் பெயருக்கு ரூ.7,00,000/–க்கு கிரையப் பத்திரம் எழுதிக் கையெழுத்திட்டு பதிந்து கொடுக்கும்படிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கக்கோரியும், ஒருக்கால் பிரதிவாதிகள் அவ்வாறு கிரையப் பத்திரம் எழுதிக்கொடுக்க முன்வராத பட்சத்தில் இந்நீதிமன்றமே பிரதிவாதிகளுக்காக தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிக்கு ரூ.7,00,000/–க்கு கிரையப் பத்திரம் எழுதிப் பதிந்து கொடுக்கக்கோரியும், ஒருக்கால் எக்காரணத்திற்காகவாவது வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கும்பட்சத்தில் மாற்றுப்பரிகாரமாக பிரதிவாதிகளை வாதியிடம் இருந்து பெற்ற கிரைய முன்தொகையான ரூ.5,00,000/–ஐ பெற்ற 27.01.2015 ஆம் தேதி முதல் 12 சதவீதம் வட்டியுடன் திரும்பச் செலுத்திவைக்க உத்தரவிடக்கோரியும், இந்த வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு, பிரதிவாதிகளைச் செலுத்திவைக்கக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு : –**

2.1. வழக்குச் சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு 18.08.1995 ஆம் தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் மூலமாகவும், 17.02.2009 ஆம் தேதியிட்ட செட்டல்மெண்ட் ஆவணம் மூலமாகவும் பாத்தியப்பட்டது. வாதி பிரதிவாதிகளிடம் வழக்குச் சொத்துக்களை கிரையத்திற்குக் கேட்டதில், பிரதிவாதிகள் வழக்குச் சொத்துக்களை ரூ.7,00,000/–க்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு 27.01.2015 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாதியிடமிருந்து பிரதிவாதிகள் முன்பணமாக ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டனர். பாக்கி கிரையத் தொகை ரூ.2,00,000/–த்தை 2 வருட காலக்கெடுவிற்குள் செலுத்தி கிரையம் பெற்றுக்கொள்ள வேண்டும் என கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒப்பந்த காலத்திலிருந்து 9

மாதத்திற்குப் பின்னர் வாதி பாக்கிக் கிரையத்தொகையை தயாராக வைத்துக்கொண்டு கிரையம் எழுதி முடித்துக்கொள்ள தயாராகவும், விருப்பத்துடனும் இருந்து வந்தார். வாதி, பிரதிவாதிகளை பலமுறை அணுகி கிரையப் பத்திரம் எழுதிக்கொடுக்கும்படி கேட்டும் பிரதிவாதிகள் பொய்யான காரணங்களைக் கூறி கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்காமல் இருந்து வருகின்றனர். கடந்த 14.11.2016 அன்று வாதி, பிரதிவாதிகளை நேரில் சந்தித்து கிரைய ஆவணம் எழுதிக்கொடுக்கக் கோரியுள்ளார். அதன்பின்னர் வாதி வழக்கறிஞர் மூலம் 26.11.2016 அன்று அறிவிப்பும் அனுப்பியுள்ளார். அறிவிப்பைப் பெற்றுக்கொண்ட 1–ம் பிரதிவாதி கிரைய உரிமையை மறுத்து 02.12.2016 அன்று பதிலறிவிப்பு அனுப்பியுள்ளார். 2, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு 29.11.2016 அன்று திருப்பப்பட்டுள்ளது. எனவே, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரியும் அல்லது மாற்றுப்பரிகாரம் வழங்கக்கோரியும் அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. 1–ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 2, 3 பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம் பின்வருமாறு : –**

3.1. வாதியின் வழக்கு பொய்யானது, நிலைநிற்கத்தக்கதல்ல. வழக்குச் சொத்துக்கள் ரூ.30,00,000/– மதிப்புடையவை. பிரதிவாதிகளின் நிலத்தின் இடைப்பொழி நில உரிமையாளர் குப்புச்சாமியிடம் 1–ம் பிரதிவாதி ரூ.5,00,000/– கடன் கேட்டபோது குப்புச்சாமி கடன் கொடுப்பதாகவும், அதற்கு 24% வட்டி கொடுக்க வேண்டும் என்றும், பிரதிவாதிகளின் சொத்துக்களை கிரைய ஒப்பந்தமாக அவரது பைனான்ஸ் கூட்டாளியான வாதியின் பெயருக்கு எழுதிக்கொடுக்கவேண்டும் என்றும் குப்புசாமியின் பெயருக்கு ரூ.50,000/–க்கு கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுக்கவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். 1–ம் பிரதிவாதி அவரது மகன்களின் பொறியியல் படிப்பிற்கு கட்டணம் செலுத்துவதற்காக பணம் அவசரத் தேவை என்பதால் மேற்படி நிபந்தனைகளுக்கு சம்மதித்துள்ளார். குப்புச்சாமி ரூ.5,00,000/– தொகையை 1–ம் பிரதிவாதியிடம் கொடுத்துள்ளார். கிரையத் தொகை ரூ.7,00,000/– எனக் குறிப்பிட்டு தயார் செய்யப்பட்டிருந்த கிரைய ஒப்பந்தத்தில் 1–ம் பிரதிவாதியும், அவரது மகன்களான 2, 3 பிரதிவாதிகளும் கையொப்பம் செய்து

கொடுத்துள்ளனர். கடனுறுதிச் சீட்டு ரூ.50,000/−க்கு எழுதப்பட்டதில் தொகை மற்றும் வட்டி விபரம் கருப்புச்சாமியால் எழுதப்பட்டுள்ளது. ஒரு வருட வட்டியாக ரூ.1,65,000/− கொடுக்கப்பட்டுள்ளது. 1−ம் பிரதிவாதி மாதம் ஒன்றுக்கு ரூ.13,750/− வீதம் வட்டியாக ரூ.1,65,000/− செலுத்தவேண்டும் என வாதி எழுதிக்கொடுத்துள்ளார். மேலும், வாதி அவரது பெயர் மற்றும் செல்போன் எண்ணையும் எழுதிக்கொடுத்துள்ளார். மேலும் 1−ம் பிரதிவாதி போடுவார்பட்டி மதியழகன் என்பவரிடம் 10.11.2011 அன்று கிரைய உடன்படிக்கை ஆவணம் எழுதி பதிவு செய்து கொடுத்து ரூ.1,00,000/− கடன் பெற்றிருந்தார். மேற்படி கடனை 27.01.2012 ஆம் தேதி 1−ம் பிரதிவாதி திருப்பிச் செலுத்தி கிரைய உடன்படிக்கை ஆவணத்திற்கு ரத்துப் பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. அன்றே வஞ்சியப்பன் என்பவர் பெயருக்கு கிரைய உடன்படிக்கை எழுதப்பட்டது. பின்னர் பெரிய மொட்டனூத்து அய்யாச்சாமியிடம் கடன் பெற்று வஞ்சியப்பனுக்கு எழுதிக்கொடுத்த கிரைய உடன்படிக்கை 17.12.2013 அன்று ரத்து செய்து ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதே தேதியில் அய்யாச்சாமியிடம் ரூ.4,00,000/− பெற்றுக்கொண்டு கிரைய உடன்படிக்கை பத்திரம் எழுதி பதிவு செய்யப்பட்டது. குப்புச்சாமி தன்னிடம் பணம் இல்லை என்றும், வாதியிடம் பணம் பெற்றுத்தருவததாகக் கூறி வாதியை 1−ம் பிரதிவாதிக்கு அறிமுகம் செய்து வைத்தார். 2015 ஆம் ஆண்டு 1−ம் பிரதிவாதி அவரது மகன்களின் படிப்பிற்காகவும், மேற்சொன்ன அய்யாச்சாமியிடம் பெற்ற கடனை தீர்ப்பதற்காகவும் ரூ.5,00,000/− கடன் பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் ரூ.50,000/−க்கு கடனுறுதிச்சீட்டும் 1−ம் பிரதிவாதி குப்புச்சாமியின் பெயருக்கு எழுதிக் கொடுத்துள்ளார். மேலும் 18.05.1995 ஆம் தேதியிட்ட பாக ஆவணத்தின் அசலையும் 1−ம் பிரதிவாதி, வாதியிடம் கொடுத்துள்ளார். வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல. வழக்கு தள்ளுபடியாக வேண்டும்.

**4. எழுவினாக்கள்:−**

**வழக்குரை, எதிர் வழக்குரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கில் கீழ்கண்ட வழக்கெழு வினாக்கள் வனையப்பட்டன−**

1. **Whether the plaintiff is entitled to the relief of Specific Performance as per the suit sale agreement?**

2. **Whether it is true that the suit sale agreement has executed by the defendant towards security for the loan transaction?**
3. **Whether the plaintiff is entitled to the alternative relief as prayed for?**
4. **To what other relief the plaintiff is entitled to?**

**5. இருதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் விவரம் :–**

**5.1. இவ்வழக்கின் வாதி தரப்பில் வாதி திரு. கருப்புச்சாமி வா.சா.1 ஆகவும், திரு. குப்புச்சாமி என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.1 குறுக்கு விசாரணையின்போது பி.வா.சா.ஆ.1 சான்றாவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.2. பிரதிவாதிகள் தரப்பில் 1–ம் பிரதிவாதி திரு. துரைச்சாமி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.11 எனக் குறியீடு செய்வதற்கு பதிலாக, தவறுதலாக பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.10 என்றும், நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளபடி பி.வா.சா.ஆ.3 ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆகவும், பி.வா.சா.ஆ.4 ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆகவும், பி.வா.சா.ஆ.5 ஆவணம் பி.வா.சா.ஆ.2 ஆகவும், பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை பி.வா.சா.ஆ.4 ஆகவும் தவறுதலாகக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவறு தீர்ப்புரை பகரும் போது சரி செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் எனக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

**5.3. திரு. ராஜ்மோகன் என்பவர் பி.வாசா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.14 எனக் குறியீடு செய்வதற்குப் பதிலாக தவறுதலாக பி.வா.சா.ஆ.11 முதல் பி.வா.சா.ஆ.13 எனக் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி தவறும் சரி செய்யப்பட்டு பி.வா.சா.ஆ.12 முதல் பி.வா.சா.ஆ.14 வரையிலான சான்றாவணங்கள் எனக் குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

**6. எழுவினா எண்கள் 1 முதல் 3–க்கான தீர்வு:–**

**6.1. வழக்குரை, எதிர்வழக்குரை, இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி தரப்பில் வாதியானவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி வழக்குரைச் சங்கதிகளையே தனது தரப்பு பிரமாண**

வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளார். வழக்குச் சொத்துக்கள் 1–ம் பிரதிவாதிக்கு 18.08.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் மூலமாகவும், 17.02.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலமாகவும் பாத்தியம் என வாதி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிகள் பிரதிவாதிகள் தரப்பால் மறுக்கப்படவில்லை.

6.2. வா.சா.ஆ.1 ஆன 18.08.1995 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அசல் பரிசீலனை செய்யப்பட்டது. மேற்சொன்ன பாகப்பிரிவினை ஆவணமானது 1–ம் பிரதிவாதி துரைச்சாமி மற்றும் மூன்று நபர்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ளதும், அதில் தாவா 1 முதல் 3 இலக்கச் சொத்துக்களும் மற்றொரு சொத்தும் B அட்டவணைச் சொத்துக்களாக துரைச்சாமிக்கு ஒதுக்கப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. மேலும், வா.சா.ஆ.7 ஆன 17.02.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தை பரிசீலித்ததில், தாவா 4–ம் இலக்கச் சொத்தானது 1–ம் பிரதிவாதிக்கு பாத்தியம் என்றும் தெரிய வருகிறது.

6.3. பிரதிவாதிகள் வழக்குச் சொத்துக்களை வாதிக்கு கிரையம் கொடுக்கச் சம்மதித்து கிரையத்தொகை ரூ.7,00,000/–ல் ரூ.5,00,000/– முன்பணமாகப் பெற்றுக்கொண்டு 27.01.2015 அன்று கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொடுத்ததாக வாதி தரப்பு வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி சங்கதிக்கு ஆதரவாக வா.சா.ஆ.2 27.01.2015 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் பிரதிவாதிகள் மூவரும் வாதிக்கு வழக்குச் சொத்துக்களை ரூ.7,00,000/–க்கு கிரையம் பேசி முன்பணமாக ரூ.5,00,000/– பெற்றுக்கொண்டதோடு பாக்கிக் கிரையத் தொகை ரூ.2,00,000/–ஐ 26.01.2017ஆம் தேதிக்குள் செலுத்தவேண்டியது என கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொடுத்ததாக வா.சா.ஆ.2 ஆவணத்தில் வாசகங்கள் காணப்படுகிறது.

6.4. பிரதிவாதிகள் தரப்பில் 1–ம் பிரதிவாதி அவரது நிலத்தின் இடைப்பொழி நிலத்துக்காரரான குப்புச்சாமி என்பவரிடம் அவரது மகன்களின் கல்விச் செலவிற்காக ரூ.5,00,000/– கடன் கேட்டிருந்ததாகவும், குப்புச்சாமி 24% வட்டி

செலுத்தவேண்டும் என்றும், ரூ.50,000/–க்கு குப்புச்சாமியின் பெயருக்கு கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுக்க வேண்டும் என்றும், குப்புச்சாமியின் பைனான்ஸ் பங்குதாரரான வாதியின் பெயருக்கு சொத்துக்களை கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுக்க வேண்டும் என்றும், அசல் பாகப்பிரிவினை ஆவணத்தை ஒப்படைக்க வேண்டும் என்றும் விதித்த நிபந்தனைகளை 1–ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்டு, 1–ம் பிரதிவாதியும், அவரது மகன்களான 2, 3 பிரதிவாதிகளும் கிரைய உடன்படிக்கை எழுதிக்கொடுத்ததாகவும், 1–ம் பிரதிவாதிக்கு ரூ.50,000/–க்கு கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்ததாகவும், அசல் பாகப்பிரிவினை ஆவணத்தை குப்புச்சாமியிடம் ஒப்படைத்ததாகவும் தெரிவித்து வாதிடப்பட்டது.

6.5. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் 1–ம் பிரதிவாதி கடன் பெற்றுக்கொண்டு அதற்கு பொறுப்பிற்காக கிரைய உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்து கடனை திருப்பிச் செலுத்துவதன் பேரில் கிரைய உடன்படிக்கையை ரத்துச் செய்துகொள்வதுமான முறைகளை பைனான்ஸ் வழக்கப்படி செய்து வந்தார் என்று தெரிவித்து, அதற்கு ஆதரவாக பிரதிவாதிகள் தரப்பு ஆவணங்களைச் சுட்டிக்காட்டி வாதிடப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்களை பரிசீலித்ததில், 1–ம் பிரதிவாதியானவர் 2011ம் ஆண்டு முதல் அவ்வாறான கிரைய உடன்படிக்கை ஆவணங்களை எழுதிக்கொடுத்துள்ளார் என தெரியவருகிறது.

6.6……2011 ஆம் ஆண்டு மதியழகன் என்பவருடன் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தி 2012ம் ஆண்டு மேற்படி கிரைய உடன்படிக்கையை ரத்து செய்யப்பட்டதும், வஞ்சியப்பன் என்பவருக்கு 27.12.2012 அன்று பொது அதிகார ஆவணம் மற்றும் கிரைய உடன்படிக்கை ஒரே தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டதும், மேலும், 17.12.2013 அன்றே கிரைய உடன்படிக்கை மற்றும் பொது அதிகார ஆவணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதும், மீண்டும் அவ்வாறான ஆவணங்கள் ரத்து செய்யப்பட்ட 17.12.2013 அன்றே அய்யாச்சாமி என்பவருடன் கிரைய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 27.01.2015 அன்று மேற்படி கிரைய உடன்படிக்கை ரத்துச்

செய்யப்பட்டுள்ளதும் பி.வா.சா.ஆ.1 முதா பி.வா.சா.ஆ.9 வரையான ஆவணங்களைப் பரிசீலித்ததில் தெரியவருகிறது.

6.7. அய்யாச்சாமியுடனான கிரைய உடன்படிக்கை ரத்து ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ள 27.01.2015 அன்றுதான் வாதியுடனான கிரைய ஒப்பந்தத்தை பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்டுள்ளனர் என்பதும் தெரியவருகிறது. அய்யாச்சாமியிடம் 1—ம் பிரதிவாதி பெற்றிருந்த கடனை தீர்ப்பதற்காகவும், 2,3 பிரதிவாதிகளின் கல்விச் செலவிற்காகவும் வாதியிடம் ரூ.5,00,000/— கடனாகப் பெற்றுக்கொண்டு அதற்கு பொறுப்பிற்காக தாவா கிரைய ஒப்பந்தத்தை ஏற்படுத்திக்கொண்டதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ளது ஏற்றுக்கொள்ளும்படியே உள்ளது.

6.8. தாவா முன்பணத்தொகை ரூ.5,00,000/—த்தை வாதியிடம் கடனாகப் பெற்றுக்கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ.13,750/— வீதம் வருட வட்டியாக ரூ.1,65,000/— செலுத்தியதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறான தொகை செலுத்தப்பட்டதாகக் கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. மேலும், பி.வா.சா.ஆ.10 கடன் பற்று மற்றும் வட்டி விபரங்கள் எழுதப்பட்டுள்ள தாளில் யாரும் கையொப்பம் இடவில்லை. மேற்படி ஆவணம் ஏற்றுக்கொள்ளத்தக்க ஆவணம் அல்ல. எனவே, பிரதிவாதிகள் வாதியிடம் ரூ.1,65,000/— செலுத்தியதாகக் கூறுவது நிரூபிக்கப்படவில்லை.

6.9. தாவாக் கிரைய ஒப்பந்தமானது கடன் பொறுப்பிற்காக ஏற்படுத்தப்பட்டது என்று கூறுவதை பிரதிவாதிகள் தரப்பு நிரூபித்துள்ளதால் வாதிக்கு ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றும், வாதிக்கு மாற்றுப்பரிகாரமாக பிரதிவாதிகள் ரூ.5,00,000/—த்தை பிரதிவாதிகள் கிரைய உடன்படிக்கை தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டி சேர்த்தும், அதன் பின்னிட்டு தொகை வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டி சேர்த்து செலுத்த வேண்டுமென்று முடிவு செய்து அவ்வாறே மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வுகள் காணப்படுகிறது.

<u>**7. எழுவினா எண்.4–க்கான தீர்வு:–**</u>

**வாதிக்கு மாற்றுப்பரிகாரம் வழங்கியுள்ளதால் தரப்பினர்களுக்கு வேறு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காணப்படுகிறது.**

**இறுதியாக இவ்வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, இவ்வழக்கில் வாதி கோரிய ஏற்றதை ஆற்றுக பரிகாரம் வழங்கத்தக்கதல்ல என தீர்வு கண்டு, மாற்றுப் பரிகாரம் வழங்கி பின்வருமாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**அ) வாதி கோரிய "ஏற்றதை ஆற்றுக" பரிகாரத்தைப் பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்தும்,**

**ஆ) மாற்று பரிகாரமாக வாதிக்கு, தாவா வா.சா.ஆ.2–ன்படியான தொகை ரூ.5,00,000/–த்தை பிரதிவாதிகள் வா.சா.ஆ.2 கிரைய உடன்படிக்கை தேதியிலிருந்து தீர்ப்பாணை தேதி வரை ஆண்டொன்றுக்கு 9% வட்டி சேர்த்தும், அதன் பின்னிட்டு தொகை வசூலாகும் தேதி வரை ஆண்டொன்றுக்கு 6% பின்வட்டி சேர்த்து செலவுத் தொகையுடன் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

**இந்தத் தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.**

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.04.10 18:10:13 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

| <u>**வாதி தரப்பு சாட்சி : –**</u> | | |
|---|---|---|
| **வரிசை எண்.** | | **சாட்சியின் பெயர்** |
| வா.சா.1. | : | திரு. கருப்புச்சாமி – (வாதி) |
| வா.சா.2. | : | திரு. குப்புச்சாமி |

**வாதி தரப்பு சான்றாவணங்கள் : –**

| வரிசை எண் | நாள் | ஆவணப்பெயர் | ஆவணத் தன்மை |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1. | 18.08.1995 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள பாகப்பிரிவினை பத்திரம் | அசல் |
| வா.சா.ஆ.2. | 27.01.2015 | வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் | அசல் |
| வா.சா.ஆ.3. | 24.11.2016 | வாதி அவரது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அஞ்சலக ரசீதுடன் கூடியது | அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4. | 29.11.2016 | பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டது சம்பந்தமான இந்திய அஞ்சல் துறையில் கணினி மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆதரவு | கணினி நகல் |
| வா.சா.ஆ.5. | 02.12.2016 | 1–ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு | சார்வு நகல் |
| வா.சா.ஆ.6. | 29.11.2016 | 2, 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு திருப்பப்பட்டதற்கான அஞ்சலக உறை | அசல் |
| வா.சா.ஆ.7. | 17.02.2009 | 1–ம் பிரதிவாதி பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணம் | சான்றிட்ட நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி : –**

| வரிசை எண். | | சாட்சியின் பெயர் |
|---|---|---|
| பி.வா.சா.1. | : | திரு. துரைச்சாமி – (1–ம் பிரதிவாதி) |
| பி.வா.சா.2. | : | திரு. ராஜ்மோகன் – (2–ம் பிரதிவாதி) |

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : –**

| வரிசை எண் | நாள் | ஆவணப்பெயர் | ஆவணத் தன்மை |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.1. | 09.12.2013 | வில்லங்கச்சான்றிதழ் | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.2. | 10.11.2011 | பிரதிவாதி மதியழகனுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை | அசல் |
| பி.வா.சா.ஆ.3. | 27.11.2012 | பொறுப்பிற்காக ஏற்படுத்திய உடன்படிக்கையை ரத்து செய்வதற்கான ரத்து பத்திரம் | அசல் |

| | | | |
|---|---|---|---|
| பி.வா.சா.ஆ.4. | 27.11.2012 | வஞ்சியப்பனக்கு பிரதிவாதிகள் எபதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் | அசல் |
| பி.வா.சா.ஆ.5. | 17.12.2013 | பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்ததற்கான ரத்து பத்திரம் | அசல் |
| பி.வா.சா.ஆ.6. | 27.11.2012 | பிரதிவாதிகள் வஞ்சியப்பனுக்கு ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் | அசல் |
| பி.வா.சா.ஆ.7. | 17.12.2013 | பிரதிவாதிகள் வஞ்சியப்பனுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தை ரத்து செய்ததற்கான ரத்து பத்திரம் | அசல் |
| பி.வா.சா.ஆ.8. | 17.12.2013 | பிரதிவாதிகள் அய்யாச்சாமியுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை பத்திரம் | அசல் |
| பி.வா.சா.ஆ.9. | 27.01.2015 | பிரதிவாதிகள் அய்யாச்சாமியுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தை ரத்து செய்ததற்கான ரத்து பத்திரம் | நகல் |
| பி.வா.சா.ஆ.10 | 27.01.2015 | பிரதிவாதிகளுக்கு வாதி கடன் பெற்ற காலத்தில் அசலும் வட்டியும் சேர்த்து குறிப்பிட்டு கணக்கு விபரக் குறிப்பு | அசல் |
| பி.வா.சா.ஆ.11. | 16.08.2023 | 01.01.2000 முதல் 15.08.2023 ஆம் தேதி வரை உள்ள வில்லங்கச் சான்று | கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.12 | 14.04.2014 | 2–ம் பிரதிவாதியின் கல்லூரி மாற்றுச் சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |
| பி.வா.சா.ஆ.13 | 13.05.2016 | 3–ம் பிரதிவாதியின் கல்லூரி மாற்றுச் சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |
| பி.வா.சா.ஆ.14 | --- | 2–ம் பிரதிவாதியின் ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2026.04.10 18:10:23 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.

கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
அ.வ.எண்.144/2024

**<u>தெளிவு/வரைவு தீர்ப்புரை</u>**

நாள் : 10.04.2026